DVC 3/2021

02.12.2024.

எம.சா.1,

பெயர்: லோகேஷ்குமார்

த/பெ. செல்வராஜ்

பு.சா.1 கு.ப.ம.எண். /2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

R1 Present. R2 absent. R1and R2 counsel present.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் மனுதாரரும் காதல் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். இரு வீட்டார் பெற்றோர்களும் எதிர்ப்பு தெரிவித்தால் பொள்ளாச்சி மாரியம்மன் கோவில் முன்புள்ள விநாயகர் கோவிலில் வைத்து நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே மனுதாரரின் கணவர் விபத்தில் இறந்து விட்டார் என்பதும் அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளதும் தெரியும் என்றால் சரிதான். 4 மாதங்கள் கழித்து சமாதானமாகி திருமணத்தை பதிவு செய்தோம் என்றால் சரிதான்.

எங்களுக்கு 30.05.2018 ம் தேதியன்று ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அவரது பெயர் பூஜா ஸ்ரீ ஆகும். குழந்தை பிறப்பதற்கு முன்பே இரு வீட்டு பெற்றோர்களும் சமாதானமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். நடத்துநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். குழந்தை பிறந்த பின்பு அதற்கு இருதய கோளாறு உள்ளது எனக்கு தெரியும். திருமணத்திற்கு பின்னிட்டு ஜோதி நகரில் 2 மாதமும் என் மனைவி கருவுற்ற பின்பு ஆச்சிபட்டியிலும் வசித்துவந்தோம் என்றால் சரிதான்.

நாங்கள் ஆச்சிபட்டியில் இருந்தபோது மனுதாரரின் பெற்றோர்கள் எந்த உதவியும் செய்யவில்லை, வளைகாப்பும் நடத்தவில்லை. குழந்தை பிறந்த பிறகு மஞ்சநாயக்கனூரில் என் பெற்றோருடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது அம்மா மனுதாரருக்கு ஏற்கனவே திருமணமாகி குழந்தை இருப்பதை சுட்டிக்காட்டி பேசி வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்துவரும்போது மனுதாரருக்கும் எனது தாயாருக்கும் சிறு சண்டைகூட வந்ததில்லை.

என் அம்மா மனுதாரருடன் சண்டையிட்டு எங்கள் இருவரையும் வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார் என்றால் சரியல்ல, அருகில் உள்ள நண்பர் வீட்டில் 2 நாட்கள் தங்கியிருந்தோம் என்றால் சரியல்ல. பின்பு எனது பாட்டி வீட்டில் நான் தங்கியிருந்தேன் என்றால் சரியல்ல, பிகே புதூரில் தங்கியிருந்தோம். நான் தினந்தோறும் குடித்துவிட்டு வந்து மனுதாரரிடம் சண்டையிட்டதால் அங்கியிருந்து எங்களை காலி செய்யச்

சொன்னார்கள் என்றால் சரியல்ல. வீட்டில் உள்ளபொருட்களை காலி செய்து எடுத்துவந்ததற்கு மனுதாரரின் பெற்றோர்கள் தான் சிலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்பு எங்கள் பெற்றோர் வீட்டிற்கே சென்றுவிட்டோம் என்றால் சரிதான். பிகே புதூரில் காலி செய்தபின்பு நாங்கள் ஆச்சிபட்டியில் குடியிருந்தோம் என்றாலும் மனுதாரரின் பெற்றோர்கள்தான் செலவு செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல.

நாங்கள் ஆச்சிபட்டியில் இருந்தபோது மனுதாரரின் நகையை கட்டாயப்படுத்தி வாங்கி விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் மீது மனுதாரர் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல, நான்தான் புகார் அளித்தேன். அதற்கு ஆதரவாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாலுக்கா காவல்நிலையத்தில் மனுதாரர் என் மீது புகார் கொடுத்தார் என்றாலும் போலிசார் என்னை விசாரித்தனர் என்றாலும் சரியல்ல.

பின்பு ஆழியாரில் குடியிருந்துகொண்டு கார்த்தி பேப்பர் மில்லில் வேலை பார்த்துவந்தேன் என்றால் சரிதான். ஆழியார் காவல்நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, நான் கொடுத்த புகார் பேரில்தான் விசாரித்தார்கள். நான் தினந்தோறும் குடித்துவிட்டு மனைவியையும், குழந்தையும் பார்க்காததால் மனுதாரர்தான் என் மீது அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. மனுதாரரின் தந்தை எனக்கு இரு சக்கர வாகனம் வாங்கித்தந்தார் என்றால் சரிதான்.

மேற்படி வாகனப் புத்தகத்தை அடமானம் வைத்து பணம் பெற்றேனா என்றால் இல்லை. 2020 ம் வருடம் எனது சகோதரிக்கு குழந்தை பிறந்து எனது வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். என் தாயாரும் நானும் மனுதாரரை அடித்து வீட்டைவிட்டு துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்குச் சென்றார் என்றால் சரியல்ல, அவராகவே அவரது பெற்றோர் வீட்டிற்கு கிளம்பிச் சென்றுவிட்டார். 02.11.2020 ம் தேதி மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதில் குடும்பத்தை விட்டு தனியாக வந்து குடிப்பழக்கம் இன்றியும், குடும்ப உறுப்பினர்களை துன்புறுத்தாமல் இருந்தால் இருவரும் சேர்ந்து வாழலாம் எனக் கோரியிருந்தார் என்றால் சரிதான்.

மேற்படி அறிவிப்பை 05.11.2020 ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். என் மனைவியை விட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்துவருகிறேன் என்றால் சரிதான். என் மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை. குழந்தைகளை பார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போது என் மனைவியின் பராமரிப்பில்தான் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான்.

குழந்தை எங்கு படிக்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. தற்போது நான் விவசாயக் கூலிக்கு சென்றுவருகிறேன். என் தாயார் பெயரில் 2 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சரிதான். மேற்படி விவசாய பூமியில் 2 கோழிப்பண்ணை வைத்து பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மஞ்சநாயக்கனூரில் எங்களுக்கு சொந்தமாக வீடுள்ளது என்றால் சரிதான். என் மனைவி பிரிந்தபின்பு நான் அவருக்கோ , குழந்தைக்கோ பராமரிப்பு செலவு செய்யவில்லை என்றால் சரியல்ல, இரண்டு முறை பணத்துடன் என் மனைவியையும் குழந்தையையும் பார்க்கச் சென்றிருந்தோன் அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை.

குழந்தையைப் பார்க்கவும், பராமரிக்கவும் நீதிமன்றத்தில் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் ஆடம்பரமாக வாழ வேண்டும் என விரும்பினார் என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல, அவர் ஆடம்பரமான வாழ்க்கை வாழத்தான் விரும்பினார். நான் மனைவியையும் குழந்தையும் சரிவர பராமரிக்காமல் குடித்துவிட்டு வந்தேன் என்றால் சரியல்ல, எனக்கு மது பழக்கம் கிடையாது. என் தாயார் மனுதாரர் ஏற்கனவே திருமணம் ஆனவர் என்பதால் அவருடன் வெறுப்புடன் பழகி வந்தார் என்றாலும் நானும் அதற்கு உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல.

ஆச்சிபட்டியில் குடியிருக்கும்போது வீட்டு உபயோகப் பொருட்களை மனுதாரரின் பெற்றேர்கள்தான் வாங்கிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, நான்தான் வாங்கினேன். வீட்டு உபயோகப் பொருட்கள்தான் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல, அவர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள். மேற்படி சங்கதிகளை நான் எதிருரையில் கூறவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் பெற்றோர்கள் நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வதற்காக அனைத்துப் பொருட்களையும் வாங்கிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் மனுதாரருக்கு செய்த வன்கொடுமையால் அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல.

என் குழந்தையின் இருதய நோய் காரணமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயற்சித்தேனா என்றால் நான் சென்றேன் அவர்கள் என்னை தகாத வார்த்தையால் திட்டி அனுப்பிவிட்டார்கள். இது சம்பந்தமாக நான் மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் உண்மையில் மனுதாரரையும் குழந்தையையும் பார்க்க அவர்களது வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆழியார் வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

எனது பெற்றோருக்கு நானும் என் சகோதரியும்தான் வாரிசு என்றால் சரிதான். என் சகோதரி வேறு ஊரில் உள்ளார் என்றால் சரிதான். தற்போது என் பெற்றோருடன்

சுமூகமாக உள்ளேன் என்றாலும் அவருக்குண்டான பராமரிப்புகளை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் வயதானவர் என்றால் சரிதான். நான்தான் விவசாயப் பணி மற்றும் கோழிப்பண்ணையை பார்த்துவருகிறேன் என்றால் சரிதான். மேற்படி பணி மூலம் மாதந்தோறும் எனக்கு ரூ.60,000/- வருமானம் வருகிறது என்றால் சரியல்ல, நான் கூலி வேலைக்குச் செல்கிறேன், தினமும் ரூ.500/- வருமானம் வருகிறது. யார் கூப்பிட்டாலும் வேலைக்குச் செல்கிறேன். நான் விவசாயக் கூலியாக வேலை செய்கிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நானும் எனது தாயாரும் செய்த வன்கொடுமை காரணமாகத்தான் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றாலும் சட்டப்படி நான்தான் அவர்களை பராமரிக்க கடப்பாடுள்ளது என்றால் சரியல்ல. நான் கணவர் என்ற முறையில் மனுதாக்கல் செய்த தேதியில் இருந்து என் மனைவிக்கும் குழந்தைக்கும் செய்யவேண்டிய பராமரிப்புகள் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி வேலைக்குச் செல்லவில்லை என்றாலும் அவரது பெற்றோரின் பராமரிப்பில் இருந்துவருகிறார் என்றாலும் சரிதான்.

என் மனைவியின் பெற்றோர்கள் வயதானவர்கள் என்றாலும் அவர்களது குறைந்த வருமானத்தை கொண்டு மனுதாரருக்கும் அவரது குழந்தைகளையும் பராமரித்துவருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 2020 ம் வருடம் மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் அதில் குழந்தையுடன் சேர்ந்து வாழ விருப்பம் இருப்பதை தெரிவித்தும் நான் அவரை பராமரிக்கும் எண்ணம் இல்லாத காரணத்தால் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரை சந்தேகப்பட்டு நான் பேசியதில்லை. நான் வழக்கிலும் தெரிவிக்கவில்லை.

மனுதாரரை நான் சித்திரவதை செய்ததாக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என எதிருரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் என் மனைவியை மகளைப் போல பார்த்துவந்தார் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் நிரூபணவாக்குமூலத்தில் தனிக்குடித்தனம் போகவேண்டும் என்றும் என்னுடைய வருமானம் போதாது என்று சண்டையிட்டதாகவும் தெரிவித்திருப்பது பொய் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சேர்ந்து வாழவிருப்பம் உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் உண்மையில் சேர்ந்து வாழ விருப்பம் இருந்ததிருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் இந்த வழக்கிலிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளைக் கூறி வழக்கினைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் 2 ம் எதிர்மனுதாரரும் நல்ல நிலையிலும் இருக்கிறோம் என்றாலும் சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை அனுபவித்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/- E. Pragasam B.A., B.L.,
Judicial Magistrate No. II,
Pollachi.